உ
ஶிவமயம்
ஓம் ஶ்ரீக³ணபதயே நம꞉
शिवमयम्
ओं श्रीगणपतये नम:

॥ ஶ்ரீ க³ணநாயகாஷ்டகம் ॥
॥ श्री गणनायकाष्टकम् ॥

தமிழ் உரை:
ஆங்கீரஸ வே. சுப்பிரமணிய சர்மா

एकदन्तं महाकायं तप्तकाञ्चनसन्निभम् |
लम्बोदरं विशालाक्षं वन्देऽहं गणनायकम् ॥ १ ॥

ஏகத³ந்தம் மஹாகாயம் தப்தகாஞ்சனஸன்னிப⁴ம் ।
லம்போ³த³ரம் விஶாலாக்ஷம் வந்தே³(அ)ஹம் க³ணநாயகம் ॥ 1 ॥

1. ஒற்றைத் தந்தம் உடையவரும், பெரிய உடம்பை உடையவரும், உருக்கி வார்த்த தங்கத்தைப் போன்றவரும், பானை போன்ற வயிற்றை உடையவரும், அகல மான கண்களை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்

मौञ्जीकृष्णाजिनधरं नागयज्ञोपवीतिनम् ।
बालेन्दुशकलं मौळौ वन्देऽहं गणनायकम् ॥ २ ॥

மௌஞ்ஜீக்ருஷ்ணாஜினத⁴ரம் நாக³யஜ்ஞோபவீதினம் ।
பா³லேந்து³ஶகலம் மௌளௌ வந்தே³(அ)ஹம் க³ணநாயகம் ॥ 2 ॥

2. தருப்பைப் புல்லும் மான்தோலும் தரிப்பவரும், பாம்பையே பூணூலாக உடையவரும், இளம்பிறைச் சந்திரனைத் தலையில் தரித்தவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

चित्ररत्नविचित्राङ्गं चित्रमालाविभूषितम् ।
कामरूपधरं देवं वन्देऽहं गणनायकम् ॥ ३ ॥

சித்ரரத்னவிசித்ராங்க³ம் சித்ரமாலாவிபூ⁴ஷிதம் ।
காமரூபத⁴ரம் தே³வம் வந்தே³(அ)ஹம் க³ணநாயகம் ॥ 3 ॥

3. அழகிய இரத்தினம் போன்ற விசித்திரமான அவயவங்களை உடையவரும், அழகிய மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், தான் விரும்பிய ரூபத்தைத் தரிப்பவரும், தேவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

गजवक्त्रं सुरश्रेष्ठं कर्णचा मरभूषितम् ।
पाशाङ्कुशधरं देवं वन्देऽहं गणनायकम् ॥ ४ ॥

க³ஜவக்த்ரம் ஸுரஶ்ரேஷ்ட²ம் கர்ணசா மரபூ⁴ஷிதம் ।
பாஶாங்குஶத⁴ரம் தே³வம் வந்தே³(அ)ஹம் க³ணநாயகம் ॥ 4 ॥

4. யானைமுகத்தோடு கூடியவரும், தேவர்களுக்குள் சிறந்தவரும், சாமரம் போன்ற காதுகளை உடையவரும், பாசம் - அங்குசம் இவைகளைத் தரிப்பவரும், தேவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

मूषकोत्तममारुह्य देवासुरमहाहवे ।
योद्धुकामं महावीर्यं वन्देऽहं गणनायकम् ॥ ५ ॥

மூஷகோத்தமமாருஹ்ய தே³வாஸுரமஹாஹவே ।
யோத்³து⁴காமம் மஹாவீர்யம் வந்தே³(அ)ஹம் க³ணநாயகம் ॥ 5 ॥

5. உயர்ந்த மூஷிகவாஹனத்தின் மேல் இருப்பவரும், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பெரும் போரில் போரிட விருப்பம் உடையவரும், பெரும் வீரத்தை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

यक्ष-किन्नर-गन्धर्व-सिद्धविद्याधरैस्सदा ।
स्तूयमानं महाबाहूं वन्देहं गणनायकम् ॥ ६ ॥

யக்ஷ-கின்னர-க³ந்த⁴ர்வ-ஸித்³த⁴வித்³யாத⁴ரைஸ்ஸதா³ ।
ஸ்தூயமானம் மஹாபா³ஹூம் வந்தே³ஹம் க³ணநாயகம் ॥ 6 ॥

6. யக்ஷர், கின்னரர், கந்தர்வர், ஸித்தர், வித்யாதரர்களால் எப்பொழுதும் வணங்கப்படுபவரும், பெரிய கைகளை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

अम्बिकाहृदयानन्दं मातृभिः परिवेष्टितम् ।
भक्तप्रियं मदोन्मत्तं वन्देऽहं गणनायकम् ॥ ७ ॥

அம்பி3காஹ்ருத3யானந்த3ம் மாத்ருபி4: பரிவேஷ்டிதம் ।
ப4க்தப்ரியம் மதோ3ன்மத்தம் வந்தே3(அ)ஹம் க3ணநாயகம் ॥ 7 ॥

7. அம்பிகையின் ஹ்ருதயத்தில் ஆனந்தத்தை உண்டாக்குபவரும், ஸப்த மாதாக்களால் சூழப்பட்டவரும், பக்தர்களுக்கு இஷ்டமானவரும், மதம்பிடித்த யானைக்கு ஒப்பானவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

सर्वविघ्नहरं देवं सर्वविघ्नविवर्जितम् ।
सर्वसिद्धिप्रदातारं वन्देहं गणनायकम् ॥ ८ ॥

ஸர்வவிக்4னஹரம் தே3வம் ஸர்வவிக்4னவிவர்ஜிதம் ।
ஸர்வஸித்3தி4ப்ரதா3தாரம் வந்தே3ஹம் க3ணநாயகம் ॥ 8 ॥

8. எல்லாவிதமான இடையூறுகளையும் அழிக்கும் கடவுளானவரும் எல்லா விதமான இடையூறுகளும் நீங்கினவரும், அனைத்து விதமான ஸித்திகளையும் கொடுப்பவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

गणाष्टकमिदं पुण्यं यः पठेत्सततं नरः ।
सिद्ध्यन्ति सर्वकार्याणि विद्यावान्धनवान् भवेत् ॥

க3ணாஷ்டகமித3ம் புண்யம் ய: படே2த்ஸததம் நர: ।
ஸித்3த4யந்தி ஸர்வகார்யாணி வித்3யாவாந்த4னவான் ப4வேத் ॥

9. புண்ணியமான இந்த கணநாயகாஷ்டத்தை எந்த மனிதன் எப்போதும் படிக்கிறானோ அவன் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறுவதுடன், படிப்பு, செல்வம் முதலியவைகளையும் அடைகிறான்.

சிவம்